பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
16 08-2025 6.30

சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அமெரிக்கா விதித்துள்ள இறக்குமதி வரி உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக தொழில்துறையை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பிரதமரை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. நேற்று காலமான நாகாலாந்து ஆளுநர் இல. கணேசனின் இறுதிச்சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் இன்று சென்னையில் நடைபெற்றது.

3. மாநில அமைச்சர் திரு. ஐ. பெரியசாமிக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறையினர் நடத்திய சோதனையின்போது பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

4. நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆஸ்திரேலியா ஓபன் டேக்வாண்டோ போட்டியில் இந்தியாவின் Nitesh தங்கப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியப் பொருட்கள் மீதான இறக்குமதி வரியை அமெரிக்கா உயர்த்தியுள்ளதால் தமிழகத்தின் தொழில் மற்றும் வர்த்தக துறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட 52 புள்ளி ஒரு பில்லியன் டாலர் மதிப்பிலான பொருட்களில் 31 சதவீதம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க சந்தையை தமிழ்நாடு அதிகமாக சார்ந்திருப்பதால் இறக்குமதி வரியின் தாக்கம் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில்தான் அதிகம் இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூடுதல் வரி விதிப்பு மாநிலத்தின் உற்பத்தி துறை மற்றும் வேலைவாய்ப்பில் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநிலத்தின் உற்பத்தி துறை ஒரு நெருக்கடியான சூழ்நிலையை தற்போது எதிர்கொண்டிருப்பதாகவும், தொழில்துறையில் ஈடுபடுவோரை பாதுகாக்கும் நோக்கில் மத்திய அரசு உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. மு.க. ஸ்டாலின் அந்தக் கடிதத்தில் பிரதமரை கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

நேற்று காலமான நாகாலாந்து ஆளுநர் இல. கணேசனின் இறுதிச் சடங்குகள் இன்று மாலை சென்னை பெசன்ட் நகர் மின் மயானத்தில் துப்பாக்கி குண்டுகள் முழங்க முழு அரசு மரியாதையுடன் நடைபெற்றது.

முப்படைகளின் ராணுவ அணிவகுப்புடனும் துப்பாக்கி குண்டுகள் முழங்க மறைந்த தலைவருக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

முன்னதாக அவரது உடல் தி.நகரில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து ஊர்வலமாக கொண்டுவரப்பட்டபோது ஏராளமானோர் கலந்துகொண்டு மறைந்த தலைவருக்கு தங்களது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

முன்னதாக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த இல. கணேசன் உடலுக்கு மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, மகாராஷ்டிரா ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன்,

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், நாகாலாந்து முதலமைச்சர் திரு. Neiphiu Rio, பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் முக்கிய தலைவர்கள் உள்ளிட்டோர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மாநில அரசின் சார்பில் இல. கணேசன் உடலுக்கு அமைச்சர்கள் திரு. மா. சுப்பிரமணியன், திரு. ரகுபதி ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

<<<<>>>>

வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக தொடரப்பட்ட வழக்கில் மாநில அமைச்சர் திரு. ஐ. பெரியசாமிக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 4 இடங்களிலும், சென்னை கிரீன்வேஸ் சாலையிலும் இந்த சோதனைகள் நடைபெற்றன.

இந்த சோதனையின்போது அமலாக்கத்துறையினர் பல்வேறு ஆவணங்களை கைப்பற்றியுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் திரு. ஐ. பெரியசாமிக்கு சொந்தமான இடங்களில் தொடர்ந்து சோதனை நடைபெற்று வருகிறது.

அவருக்கு சொந்தமான கார்களிலும் இந்த சோதனை நடைபெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

மருத்துவப் படிப்பில் மாணவர்கள் சேர்வதற்கு இடம்பெற்று தருவதாக கூறி இடைத்தரகர்கள் என்ற பெயரில் மோசடி நடைபெற்று வருவது குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு. ஆ. அருண் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாநில அரசின் சார்பில் இன்று வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், மருத்துவக் கல்லூரி சேர்க்கைக்கு இடைத்தரகர்களை நம்பி ஏமாற வேண்டாம் என்று மத்திய குற்றப்பிரிவு அறிவுரை வழங்கியுள்ளதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மருத்துவ மாணவர் சேர்க்கை நீட் தேர்வு தரவரிசைப் பட்டியலின் அடிப்படையிலேயே நடைபெறும் என்றும், இதற்கான கலந்தாய்வில் பங்குபெறுவதன் மூலமே மாணவ-மாணவியர் தங்களின் மருத்துவப் படிப்பிற்கான இடத்தினை தெரிவு செய்ய முடியும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் வறட்சி ஏற்பட்ட காலத்தில் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் அஇஅதிமுக ஆட்சியில் வழங்கப்பட்டதாக அக்கட்சியின்

பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் இன்று விவசாயிகள் மற்றும் வணிகர்களை சந்தித்துப் பேசிய அவர், குடிமராமத்து திட்டம் முழுவீச்சில்

*செயல்படுத்தப்பட்டதால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து விவசாயம் சிறப்பான நடைபெற்றதாக கூறினார்.*

*காவிரி ஆற்றை தூய்மைப் படுத்த மத்திய அரசு முதற்கட்டமாக 11 ஆயிரத்து 500 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.*

*சரக்கு மற்றும் சேவை வரியை குறைப்பதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.*

*விவசாயத்தை மேலும் ஊக்குவிக்கவும், கைத்தறித் தொழிலை மேம்படுத்தவும் தங்களது கட்சி நடவடிக்கை எடுக்கும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.*

**<<<<>>>>**

*தமிழகத்தில் பட்டா மாறுதல், மகளிர் உரிமைத் தொகை, பெயர் மாற்றம் உள்ளிட்ட மனுக்களுக்கு 45 நாட்களில் தீர்வு காணப்படும் என்று மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.*

*விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட நகராட்சி சமுதாய கழிப்பறை மற்றும் நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடம், புதிய நியாய விலைக் கடை ஆகியவற்றை இன்று திறந்து வைத்துப் பேசினார்.*

*பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக நடத்தப்பட்டு வரும் முகாம்களில் பெறப்படும் மனுக்களுக்கு உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்தார்.*

**<<<<>>>>**

*நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர், வட மற்றும் தென் தமிழக கடலோர பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவித்தார்.*

*(Voice Byte 1 - Senthamaraikannan - 41 Sec)*

*தமிழக கடலோரப் பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்றும், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் அறிவுறுத்தியுள்ளார்.*

*(Voice Byte 2 - Senthamaraikannan - 32 Sec)*

**<<<<>>>>**

*<u>இருவரிச் செய்திகள்</u>*

*நாகப்பட்டினம் - இலங்கை காங்கேசன்துறைக்கு இடையேயான கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டு 2 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி மாணவர்கள் பயணம் மேற்கொள்ள கட்டண சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.*

------------

*தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் தொடர் விடுமுறையை ஒட்டி ஏராளமான சுற்றுலாப் பயணிகள் குவிந்தனர்.*

-------------

*நீலகிரி மாவட்டம் உதகையில் நடைபெற்ற போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணியில் ஏராளமான மாணவர்கள் பங்கேற்றனர்.*

------------

திண்டுக்கல் மாவட்டம் பழனி தண்டாயுதபானி சுவாமி திருக்கோயிலில் ஆடிக் கிருத்திகையை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

------------

மயிலாடுதுறை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோயிலில் ஆடிக் கிருத்திகையை ஒட்டி நடைபெற்ற சிறப்பு அபிஷெகத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

------------

திருச்சியில் உள்ள வேணுகோபாலகிருஷ்ணன் கோயிலில் கிருஷ்ண ஜெயந்தியை ஒட்டி சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

------------

------------

*__விளையாட்டுச் செய்திகள்__*

*ஆஸ்திரேலியா ஓபன் டேக்வாண்டோ போட்டியில் இந்தியாவின் Nitesh தங்கப் பதக்கம் வென்றார்.*

*Carrara-வில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 63 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.*

*இப்போட்டியில் Shivans, Regi மற்றும் Rodali ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றர்.*

--------------

*அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ரித்விக் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 4-6, 12-10 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலியாவின் *Patric Harper* - தாய்லாந்தின் *Pruchya Isaro* இணையை வென்றது.

-------------

ஸ்வீடனில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மனுஷ் ஷா, Yashaswini Gorpade ஆகியோர் வெற்றி பெற்றனர்.

-------------

இந்தியாவில் முதல் முறையாக சர்வதேச குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் வரும் 20ஆம் தேதி முதல் 23ஆம் தேதி வரை டேராடூனில் நடைபெறுகிறது.

இந்தியா, சீனா, ஜப்பான், ஹாங்காங், இந்தோனேஷியா, சிங்கப்பூர், தாய்லாந்து உள்ளிட்ட 11 நாடுகள் இப்போட்டியில் கலந்துகொள்கின்றன.

தடகள வீரர்களின் திறமையை வெளிப்படுத்தும் வகையில் 9 வகையான குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

-------------

*Perth*-ல் இன்று நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஹாக்கிப் போட்டியில் இந்தியா தோல்வியடைந்தது.

------------

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் மாநில அளவிலான இறகுப்பந்து போட்டி தொடங்கியது.

*வரும் 24ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் மாநிலம் முழுவதிலும் இருந்து ஆயிரத்து 100 வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.*

<<<<The End>>>>